**சரியான விடை II Revision Commece Key 2016-17**

1.(c) கூட்டுபங்கு நிறுமம்
2.(a) உலகளவில் பெரியது
3.(a) விரைவாக
4.(c) சிற்றளவு வியாபாரம்
5.(a) பூரண நல்ல நம்பிக்கை
6.(c) 1932 சட்டம்
7.(b) விருப்பத்தின் பேரில்
8.(c) 7
9.(c) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி
10.(a) கடனாளர்கள்
11.(b) 15
12.(a) ரூ 5000
13.(a) 15 மாதங்கள்
14.(c) நிதிப்பத்திரங்கள்
15.(b) கரடி
16.(c) 6
17.(d) 25
18.(c) கூட்டுறவுச் சங்கம்
19.(c) அரசு நிறுமம்
20.(a) 51%

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. வரையறா பொறுப்பு
22 அரசு ஊழியர்
23. ஒரு
24. வரையறையில்லை
25. உறங்கும்/உழையா/முதலிடும்
26. ஒப்புக்கொண்ட
27. வரையறுக்கப்படாதது
28. செயல்முறை விதிகள்
29. குவிவு
30. இரண்டு
31. உரிமையாளர்கள்
32. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில்
33 .சிறப்பு
34. தகவலறிக்கை
35. முன்னோக்கிய பட்டியல் பத்திரங்கள்
36. முனைமவேட்டையாளர்
37. இராபர்ட்ஓவன்
38. மக்களாட்சித் தன்மை
39. துறைவாரி அமைப்பு
40. இயக்குநரவை

**ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி 10X4=40**

**41.அமைப்பு** பொதுவான நோக்கம் அல்லது நோக்கங்களை வெற்றியடையச் செய்வதற்காக இணக்கமான சிறப்பு வாய்ந்த பகுதியினை சரிக்கட்ட கூடியதொன்றாகும். **-லூயிஸ் எச். ஹேனே**

**42.பன்னாட்டு நிறுமம் எ.கா:** 1.யூனி லீவர் லிமிடெட் 2.யூனியன் கார்பைடு 3.இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் 4.பிலிப்ஸ் 5.கோகோ கோலா கழகம்.

**43. கூட்டு உருவாக்கம் பெறாத அமைப்புகள்:** தனியாள்வணிகம், கூட்டாண்மை இந்துக் கூட்டுக் குடும்பம்

**44. உழையாக் கூட்டாளி:**இவ்வகை கூட்டாளிகள் தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவ்வகை கூட்டாளிகள் உறங்கும் கூட்டாளிகள் அல்லது உழையாக் கூட்டாளிகள் அல்லது முதலிடும் கூட்டாளிகள் என அழைக்கப்படுவர்.

**45. கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு:** கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய தொகையை அனைத்து கூட்டாளிகளின் தனிச் சொத்துக்களிலிருந்து பெறுவது - **கூட்டுப்பொறுப்பு** ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச் சொத்தின்மீது வழக்கு தொடுத்து பெறுவது – **தனிப்பொறுப்பு**

**46. வரையறு பொறுப்பு:** கூட்டுப் பங்கு நிறுமத்தில் ஒரு பங்குநர் தனது **பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும்** மதிப்பளவே பொறுப்பாகிறார்.

**47. பங்குகளை வட்டத்தில் வெளியீடுதல்** : பங்குகளை அவற்றின் முகமதிப்பிற்கும் குறைத்து வெளியிடப்படுதல் வட்டத்தில் வெளியிடுதல் ஆகும். உ-ம் பங்கொன்றின் முக மதிப்பு ரூ10 எனவும் அது ரூ 8 க்கு வெளியிடப்படுவதாக கொண்டால் பங்குவெளியீட்டு தள்ளுபடிரூ2 ஆகும்.

**48.சட்டமுறை அறிக்கை:** சட்டமுறை கூட்ட நாளுக்கு 21 நாட்களுக்கு முன்னர் சட்டமுறை அறிக்கையை உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும். சட்டமுறை அறிக்கையில் காணப்பெறும் செய்திகள் குறித்து பங்குநர்கள் விவாதிக்கலாம்..

**49.மாற்று இயக்குநர்** : இயக்குநர் ஒருவர் தொடர்ந்து மூன்று மாதங்கள் வெளியூர் சென்றிருந்தால் அவருக்கு பதிலாக இயக்குநரவை மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்கும் அந்த நபரே மாற்று இயக்குநர் ஆவார்.

**50. ஒப்புறுதியளித்தல்:** பேரளவு விடுப்புகள் ஒப்புறுதியளித்தல் முறையிலேயே வெளியிடப்படுகின்றன. இந்த முறையில் ஒப்புறுதியர்கள் பொது மக்களுக்கு வெளியிடப்பட்ட பங்குகள் முழுவதுமாக எடுத்துக் கொள்ளப்படும் என வாக்குறுதியளிக்கின்றனர். அவ்வாறு பொது மக்களால் எடுத்துக் கொள்ளப்படாத பங்குகள் முழுவதையும் தாங்களே எடுத்துக் கொள்கின்றனர்.

**51.பரஸ்பர நிதிகள்** : இந்திய பத்திர மற்றும் மாற்றகங்கள் வாரியம் ஒழுங்கு படுத்துதல் 1993 விதிகளின்படி, 'பரஸ்பர நிதி' என்பது "அறக்கட்டளை அல்லது கூட்டுரு அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நிதி. இதன் அறங்காப்பாளர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களின் கீழ் சிறு அலகுகள் மூலமாக பொதுமக்களிடமிருந்து பணத்தை மூலதனமாகப் பெற்று நிறுமம் மற்றும் பல்வேறு வாணிப நிறுவனங்களின் தங்கள் அமைப்பின் சட்டத்திற்குட்பட்டு முதலீடு செய்யும்" என வரைவிலக்கணம் கொடுத்துள்ளது.

**52. இராக்டேல் முன்னோடிகள்:** இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844ம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கினார். இது முதன்முதலாக தொடங்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும். இராபர்ட் ஓவன் கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாவார்.

**53.கூட்டுறவு சிறப்பங்காடி இலக்கணம்:**சில்லறை விற்பனை செய்யும் துறைவாரி அமைப்பு நான்கு அடிப்படை துறைகளைக் கொண்டது. மளிகைப்பொருள் சுயசேவைப்பிரிவு மாமிசம் பால் பொருள்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருள்கள் விற்பனை செய்யும் இடம் சலுகை அடிப்படையில் துறைகளை குத்தகைக்கு நடத்தும் இடம் என்று M.M.ஜிம்மர்மென் வரையறுக்கிறார்.

**54. நாட்டுடைமையாக்கம்** : ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை நாட்டுடைமையாக்கம் எனலாம்.

**55.பொதுக்கழகத்தின் மேலாண்மை:**
பொதுக்கழகங்கள் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது. தகுதி, திறமை, அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகின்றனர்.

**பகுதி - இ 5x8=40**

**56. இந்துகூட்டுக்குடும்பம்:** 1.இந்து கூட்டுக்குடும்ப வணிக அமைப்பில் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது. 2.இதில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள்ஆகியோர் அடங்குவர். 3.அவர்களது சொத்துக்கள் அனைத்தும் கூட்டுச் சொத்தாகும். 4.இக் குடும்ப வணிகம் குடும்ப தலைவர் மூலம் நடைபெறுகிறது, அவர் கர்த்தா என அழைக்கப்படுகிறார்.5.இந்துகூட்டுக்குடும்பத்தில்பெண்களுக்கு சேர்ந்துவாழவும், திருமணம்செய்துகொள்ளவும்1956சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது.. 6.இந்து கூட்டுக்குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில்கள், சிறுதொழில்கள் போன்ற தொழில்களைச் சார்ந்திருக்கும். 7.1985ஆண்டு சட்டத்தின்படி ஆண்களை போலவே பெண்களுக்கும் சமஉரிமை உண்டு.8.அஸ்ஸாம், மேற்குவங்காளத்தில் தாயபாகாசட்டமும், இதர பகுதிகளில் மிட்டக்சராசட்டமும் இந்துகூட்டுக்குடும்பம் பின்பற்றுகிறது

**57. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம்** : 1. நிறுவனத்தின் பெயர் 2. ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம் 3. கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி 4. நிறுவனம் மேற்கொள்ள இருக்கும் தொழிலின் தன்மை 5. கூட்டாண்மையின் காலவரையறை 6. ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கிய முதல் தொகை 7. ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை. 8. இலாப பகிர்வு விகிதம்

**58. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள்**
1.நிறுமச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை **A** யின் விவரங்கள் செயல்முறை விதிகளில் குறிப்பிட வேண்டும். 2.பங்குகள் ஒதுக்கீடு பங்குகள் மீது அழைப்பு கோரல் தொடர்பானவை

3.பங்குச் சான்றிதல்கள் பங்காணைகள் அனுப்புதல் குறித்து
4.பங்குகளை பங்கிருப்பாக மாற்றுதல் 5.பங்கு முதலை மாற்றி அமைத்தல் 6.இயக்குநர்களின் கடன்வாங்கும் அளவு 7.இயக்குநரவை கூட்டங்கள் 8.நிறுமக் கலைப்பு

**59.முறைக்கேடான ஒதுக்கீடு** : 1.பங்கொன்றின் இயல்மதிப்பு குறைந்தது 5 சதவீதம் செய்தல்
2.தகவலறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் குறைந்தளவு பங்கெடுப்பு பெறாத போதும் பங்குகளை ஒதுக்கீடு செய்தல்
3.பங்கு விண்ணப்பப்பணத்தை அட்டவணை வங்கியில் போட்டு வைத்திருக்காமல் ஒதுக்கீடு செய்தல்
4.தனி ஏற்பாட்டின் மூலம் பங்குமுதல் திரட்டிட ஏற்பாடு செய்துவிட்ட நிலையில் தகவலறிக்கை வெளியிடாத போது தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை ஒன்றை பங்கு ஒதுக்கீட்டிற்கு குறைந்தது 3 நாட்களுக்கு முன்னர் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.அவ்வாறு தாக்கல் செய்யா விடில் அது முறைக்கேடான ஒதுக்கீடாக கருதப்படும்.

**60.இயக்குநர் நீக்கம்:** பதவிக் காலம் முடியுமுன்னரே இயக்குநர் ஒருவரை சாதாரணத் தீர்மானம் நிறைவேற்றிப் பதவியிலிருந்து நிறுமம் நீக்கிவிடலாம். இனால் அவ்வாறு நீக்கப்பட்ட அவர், மோசடி நோக்கில் செயல்பட்டிருக்க வேண்டும். அல்லது தனது பொறுப்பாண்மை நிலைக்குக் குந்தகம் ஏற்படுமாறு நிறும நலனை ஓதுக்கிவிட்டுச் சொந்த ஆதாயத்துக்காகச் செயல்பட்டிருக்க வேண்டும். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மைய அரசு இயக்குநர் ஒருவரை பதவியினின்றும் நீக்கலாம். நிறுமச் செயல்பாடுகளில் பங்குநர்களைக் கொடுமைப்படுத்தும் வகையிலும், நிர்வாகம் சீர்கேட்டடையும் வகையிலும் செயல்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டு விண்ணபித்திருப்பின், அதனை ஆய்ந்து அதனடிப்படையில் நிறுமச் சட்டத் தீர்ப்பாயம் ஒருவரை இயக்குநர் பதவியிலிருந்து நீக்க முடியும்.

**61.ஊக வணிகரின் வகைகள்: காளை (தெஜிவாலா)** : பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை ஊக வணிகர் ஆவர். இவர் எல்லாம் நன்மைக்காகவே என்ற மனப்பான்மை கொண்டவர் **கரடி அல்லது மண்டிவாலா:** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். ஒரு கரடி ஊக வணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர். **கலைமான்**: கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். இவர் **'முனைம வேட்டையாளர்'** என்றும் அழைக்கப்படுகிறார். **முடவாத்து:** தற்போதைய, தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கரடி ஊக வணிகரே முட வாத்து என்று அழைக்கப்படுகிறார்.

**62. கூட்டுறவுஅமைப்பின் குறைபாடுகள்:**

**1)திறமையற்ற மேலாண்மை:**கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அமைப்பை மேலாண்மை செய்யப் போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். மேலாண்மையைத் திறம்படச் செய்ய ஆர்வமில்லாதவர்களாக இருக்கிறார்கள். திறமையுள்ள அனுபவமிக்க நபர்களை பணியில் அமர்த்த இயலாது.

**2)வரையறு முதல்**: குறைந்த வளங்கள் உள்ள மனிதர்களால் கூட்டுறவுச் சங்கங்கள வழக்கமாக அமைக்கப்படுகின்றன. ஒரு நபர் ஒரு வாக்கு முறை உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதை தடைசெய்கிறது. இதனால் இவ்வமைப்பு குறைந்த முதலுடன் சிரமப்படுகிறது.

**3)தக்க தூண்டுகோல் இல்லாமை:**இலாப நோக்குஇல்லாமையும் குறைந்த பட்ச 9விழுக்காடு பங்காதாயமும் மேலாண்மையின் பொறுப்புக்குறைய காரணமாகிறது. பணியாளர்கள் குறைந்த ஊதியம் பெறுவதால் கடின உழைப்பில் ஆர்வம் காட்டுவதில்லை.

**4)ஒற்றுமையின்மை:** சில வேலைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை. இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது.

**63.அரசு நிறுமத்தின் இயல்புகள் :**

**1.கூட்டுருவாக்கம்:** அரசு நிறுமம் இந்திய நிறுமச்சட்டத்தின் கீழ் கூட்டுருவாக்கப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது.

**2.அரசுநிதி :**இதற்கு தேவையான பெரும்பான்மை பங்குமுதல் அதாவது 51அரசு பெற்றுள்ளது.

**3.பொதுமக்கள் பங்கேற்பு:** தனியர் துறையும் பொதுமக்களும் பங்கு முதல் பெற்று இதில் பங்கேற்கிறார்கள். **4.மேலாண்மை:** இதன் மேலாண்மை இயக்குநரவையிடம் உள்ளது.தகுதி திறமை அனுபவம் வாய்ந்தவர்களையே இயக்குநர்களாக அரசு நியமிக்கும். இதில் பல பிரிவினர்களும் இடம் பெறும் வண்ணம் அரசு நியமிக்கின்றது. **5.தன்னாட்சியுரிமை** : அரசு நிறுமங்கள் நிர்வாகம் மற்றும் நிதி குறித்து சுதந்திரமாக முடிவெடுத்து செயல்படும் **6.பணியாளர்கள்:** அதன் பணியாளர்கள் அரசு அலுவலர் அல்ல. இயக்குநர்கள் மற்ற பணியாளர்களை அரசு தோர்ந்தெடுத்து அமர்த்தும்.**7.கட்டுப்பாடு** :அந்தந்த துறை சார்ந்த அமைச்சரின் கட்டுப்பாட்டிற்கும் கண்காணிப்பிற்கும் உட்பட்டு செயல்படுகிறது.
8.தணிக்கையர் :இதன் தணிக்கையாளரை அரசே நியமிக்கும்.

**பகுதி - ஈ 4x20=80**

**64. அ)அமைப்பின் கோட்பாடுகளை விவரிக்க.**

**1.நோக்கங்களின்ஒருமை:** அமைப்பின் குறிக்கோள்கள் தெளிவாக முடிவு செய்யப்பட வேண்டும். நோக்கம் இலக்கினை அடையக்கூடியதாக இருக்க வேண்டும்.
**2.வேலைப்பகிர்வு:** அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட வேண்டும். இதன்மூலம் மொத்த பணிச்சுமை உணரப்படும். இது பகிர்வு செய்யப்பட வேண்டும். இதுவே துறைப்படுத்தல் ஆகும். **3. கட்டுப்பாட்டு வீச்செல்லை** : ஒரு அதிகாரி எத்தனை கீழ்பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்ற எல்லையே கட்டுப்பாட்டு வீச்செல்லை எனப்படும். ஓர் உயர் அலுவலர் தனக்கு கீழ் உத்தம எண்ணிக்கையில் கீழ்பணியாளர்களை மேற்பார்வை செய்வதே அமைப்பின் திறனை மேம்படுத்தும். **4. தரவரிசைக் கோட்பாடு** : ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ் நோக்கி வர வேண்டும். இது "கட்டளை இணைப்பு" என்றும் அழைக்கப்படும். **5. கட்டளையொருமை** : ஒரு பணியாளர் ஒரு அதிகாரியிடமிருந்தே ஆணைகளை பெறும் வகையில் அமைப்பு இருக்க வேண்டும். இரண்டு அதிகாரிகளின் கீழ் ஒருவர் பணியாற்றும் நிலை எழுந்தால் யாருடைய ஆணையை நிறைவேற்றுவது என குழப்பம் ஏற்படும், இதன் விளைவாக குழப்பமும், ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்பு அதிகம். **6. பணி வழி வரைவிலக்கணம்** : ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். ஒவ்வொரு பணியாளருக்கும் இடையே உள்ள தொடர்புகள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். **7. ஒருமுனை இயக்கம்** : ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின், தொகுதியின் நோக்கங்கள் வெற்றியடைய ஒரு தலைமையும் ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும். அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை நிறைவேற்றவும் இது அவசியம். **8. ஒருங்கிணத்தல்** : விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். இலாபம் அதிகரிக்க கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். **9. அதிகார ஒப்படைவு** : ஓர் உயர் அதிகாரி தனக்கு கீழ் உள்ள பணியாளரிடம் சில பணிகளை ஒப்படைக்கிறார். இதை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்க வேண்டும். கீழ் பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.**10. பொறுப்பு கோட்பாடு** : ஒரு மேலதிகாரி தனக்குக் கீழ்பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார். அலுவலர் தனது மேலதிகாரிக்குப் பொறுப்பாகிறார். **11. நெகிழ்வுத்தன்மை** : மாறும் சூழ்நிலைக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும். சீர்குலைவு ஏதுமின்றி விரிவுபடுத்தக்கூடிய வகையில் அமைப்பு இருத்தல் வேண்டும். இதுவே நெகிழ்வுத்தன்மையாகும். **12. திறமை** : அமைப்பின் வெற்றிக்கு திறமையே திறவுகோல். திறமை பயிற்சி மூலம்மேம்படுத்தப்படலாம். குறிக்கோள்களை குறைந்த செலவில் அதிக பலனுடன் நிறைவேற்ற திறமை பயன்படும். **13.தனித்திறமை** : அமைப்பு தனிநபர் திறமை தொடர்பானது. எனவே, பணியாளர் தேர்வு, இட அமர்வு, பயிற்சி அவசியமாகிறது. அமைப்பு மனிதவளத்தை உத்தம அளவில் பயன்படுத்தி வளர்ச்சித்திட்டங்களை ஊக்கமடையச் செய்ய வேண்டும். **14. எளிமை** : அதிகார படிநிலை மட்டங்கள் அதிகமாக இருந்தால் செய்தித் தொடர்புகளில் சிக்கலும், குழப்பமும், மோதலும் ஏற்படும். ஒருங்கிணைப்பு முடியாது போகலாம். எனவே, எளிமையான படிநிலைகள் அமைக்கப்பட வேண்டும்.

**64.ஆ.அரசு தொழில்களின் நோக்கங்கள் :**

**1.பல்வகைஉற்பத்தி செய்ய உதவுவது**: இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர்.லாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும்

முதலீடு செய்ய விரும்புவர்.லாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத அதே சமயம் நாட்டுக்கு தேவையான தொழிகளின் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.தனியார் துறை மேற்கொள் அஞ்சும் தொழிகள் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.

**2.அடிப்படை தொழிகளின் வளர்ச்சி** : பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படை தொழிகள் எனலாம்.எடுத்துக்காட்டாக இரும்பு எஃகு ஆலைகள் வேதிய தொழில்கள் போன்றவை அடிப்படை தொழிகள்ஆகும். இத்தகைய தொழிகள் அரசு தொழில்கள் அரசு தொழில்களாகவே இருப்பதே சால சிறந்தது.

**3.பேரளவு முதலீட்டு நிறுவனங்கள்:**
சிலதொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்ய விரும்பும் மேலும் அந் நிறுவனங்கள் தொழில் உற்பத்தி தொடக்க காலம் நீண்டதாக இருக்கும்' தனியார் தொழில் முனைவோர் கலால் பேரளவு முதலீட்டினை அளிக்க முடியாது.எடுத்துக்காட்டாக இரயில் கப்பல் கட்டுவது மின்சக்கி ஆகிய தொழிகளுக்க தேவையான பேரளவு முதலீட்டினை தனியார் முதலீட்டினால் அளிக்க முடியாது.

**4.இன்றியமையாத வசதிகளை நல்குவது**: குடிநீர் மின் உற்பத்தி மின்சக்தி எரிவாயு போக்குவரத்து தகவல் தொடர்பு போனடறவை நாடு முழுவதும் அன்றாட தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும் இத் தேவைகள் மிக குறைந்த விலையில் பூர்த்தி செய்ய வேண்டும். எனவே இவ்வசதிகளை செய்து தரும் அமைப்பகள் அரசு தொழிகள் ஆகவே இயங்க வேண்டும்.

**5.முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்தவது:** ஒரு நாட்டை அயல் நாடுகளின் தக்குதலில் இருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.நாட்டின் பாதுகாப்பு சார்ந்த தொழிகள் தனியார் வசம் இருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்பு உண்டு.அல்லாமலும் அவர்களட நாட்டின்பாதுகாப்பு குறித்த ரகசியங்களை எதிரி நாடுகளுக்கு சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது.

**6.அனைத்து பகுதிகளிலும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல்:**தொழில் உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்கு தேவையான அனைத்து உற்பத்தி தொழில்களை ஏற்படுத்துவதே ஆகும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமச்சிரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.தனியார் துறையினர் லாபம் ஈட்ட வாய்ப்ப உள்ள அவர் நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்கவிரும்பியதில்லை.

**7.இயற்கை வளங்கள் தோன்றி எடுத்தல்:** நாட்டின் இயற்கையாக கிடைக்கும் பொருட்கள் வளங்களை தோன்றி எடுக்கும் தொழிகளில் முதலீடு செய்வதே நட்டத்தை ஏற்று கொள்ள தனியாா துறை விரும்புவதில்லை. இந்தியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிசன் புதுத்தோற்று வாய்களை கண்டுபிடிப்பதற்காக பேரளவு தொகைகளை செலவிடுகிறது.

**8.பொருளாதார வலிமை** செரிவடைவதை தடுத்தல்:
உற்பத்தியானது தனியாரிடம் முழுவதுமாக இருந்தால் தங்களுடைய லாபத்தை அதிகரிப்பதற்காக அவர்கள் பொது மக்களையும் நுகர்வோரையும் சுரண்டுவர் தனியார் துறை அவ்வாறு லாப நோக்கோடு செயல்படும் போது அதன் விலைவாக பொருளாதார வலிமை அவற்றிடம் மேலும் செறிவடைவதையும் நாம் அறிவோம்.

**9.நிறைவேலைவாய்பை உறுதிபடுத்துதல் :**
நிறைவேலைவாய்பு பொது உடமை உற்பத்தியினாலே நாடுகள் கூட வேலைவாய்பை பெறுவதில்லை .நாட்டில் உள்ள வழங்கள் நன்கு பயன்படுத்தப் பட்டால்தான் பொருளதாரவளர்ச்சி விரைவாக ஏற்படும்.இதற்கு அரசு பொருளாதார துறை கவனம் செலுத்தி திட்டங்கள் தீட்ட வேண்டும்.

**10.அரசின் வருவாயை பெருக்குதல்:** சில அரசு நிறுவனங்கள் வணிக கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும்.அந்நிறுவனங்களில் வருவாய் அரசு கருவுலத்தில் சேர்க்கப்படும்.இவ்வாறு அரசின் நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டு பொருளாதார முக்கிய துவம் வாய்ந்த திட்டங்களை நிறைவேற்ற பயன்படுத்த படுகிறது இது மக்கள் வாழ்க்கை தரம் உயர்த்த உதவும்.கல்வி மருத்தவம் வீடு போன்றவை பொது நல பணிகளுக்கம் இவ்வருவாய்செலவிடப்படுகிறது.

**65)அ) தனிநபர் வணிகத்தின் குணாதிசியங்கள்:**
**1) தனிநபர்உரிமையும் கட்டுபாடும்** தனிநபர் ஒருவரே இதன் உரிமையாளர். எனவே அவரே உரிமையாளராகவும் தலைவராகவும் யாருடைய குறுக்கிடும் இல்லாமல் சுந்திரமாக வியாபாரத்தை நடத்துகிறார்.அதனால் தனியாள் வணிகத்தின் உரிமையும் கட்டுப்பாடும் அவர் வசமே உள்ளது.
**2)மூலதனம்:** தனியாள்வணிகத்தில் அவரே முதலீடு செய்கிறர். இம்முதல் தன்சொந்த சேமிப்பிலிருந்தோ அல்லது நண்பர்கள் உறவினர்கள் மற்றும் நிதிநிறுவனங்களிடமிருந்தோ கடனா பெற்று முதலீடு செய்யலாம். **3)வரையறா பொறுப்பு:** இவரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. வியாபாரகடன்களுக்கு தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிட்டால் தனதுசொந்த சொத்திலிருந்து அக்கடன்களை தீர்க்கவேண்டும்.
**4)இலாபநட்டம்:** வியாபாரத்தில்கிடைக்கும்இலாபம் முழுவதும்தனிவணிகரையேசேரும். அவர் பிறருடன் பங்கிட்டுக்கொள்ளதேவையில்லை.அதுபோலநட்டம் ஏற்பட்டால்அந்தநட்டம்முழுவதையும்அவரே ஏற்கவேண்டும்.
**5)சட்டத்தனித்துவமின்மை:** தனியாள் வணிகத்தில் உரிமையாளரையும் தொழிலையும் சட்டம் ஒன்றாகக்கருதுகிறது. உரிமையாளரோ அவரே நிர்வாகம் செய்கிறார். கூட்டுப்பங்குநிறுமத்தைப்போல் உரிமையும் நிர்வாகமும் பிரிக்கப்படவில்லை. **6.தனிச்சட்டம்மில்லை:** கூட்டாண்மைசட்டம்கூட்டாண்மைக்கும்இந்தியநிறுமங்கள்சட்டம்நிறுமத்திற்கும்இந்தியகூட்டுறவுச்சட்டம்கூட்டுறவுசங்கங்களுக்கும்இருப்பதைப்போலதனியாள்வணிகத்திற்குதனிச்சட்டம்ஏதுவும்இல்லை.**7)பதிவு:-** தனியாள்வணிகத்தைபதிவுசெய்ய வேண்டியதில்லை சிலவகைத்தொழில்களைமேற்கொள்ள உள்ளாட்சி நகராட்சிமற்றும்மாநகராட்சியிடமிருந்து உரிமம் பெறவேண்டும்.
**8)வாழ்வு:** நிறுமம் போன்றுஇதற்கு நீடித்த வாழ்வு கிடையாது. தனியாள் வணிகரின் வாழ்வைப்பாதிக்கும் எதுவும்அவருடையதொழிலையும்பாதிக்கும்.அவருடையஇறப்பு(அ) தொழில்திறமை இழத்தல்(அ) அவருக்கு வாரிசுஇல்லாமை போன்றவை தொழிலை முடிவுக்குகொண்டுவரும்.
**9)எளிமை**இதைதொடங்குவதும்கலைத்தலும்மிகவும் எளிது. இவ்வணிகத்தைகலைக்கசட்டவிதிகளைபினபற்றதேவையில்லை.
**10உள்ளூர்வியாபாரம்:**இவ்வணிகம்ஒருகுறிப்பிட்டப்பகுதியில்மட்டுமே நடைபெறும். சிலவகைத் தனிவணிகங்கள் கிளைகளுடன்சிலஇடங்களில்நடைபெறும்

**65.ஆ) கூட்டுறவின் நன்மைகள்**
**அமைப்பது எளிது:** கூட்டுறவு சங்கம் அமைப்பது எளிது. செலவும் அதிகமில்லை பதிவு நடைமுறையும் எளிமையானது. **எண்ணிலா உறுப்பினர்கள்:** அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை. உறுப்பினர் தன்னிச்சையாக சேரலாம், விலகலாம். **மக்களாட்சி மேலாண்மை:** ஒருவர் எத்தனை பங்கு வைத்திருந்தாலும் சமத்துவ அடிப்படையில் 'ஒருஆள், ஒரு வாக்கு' என்ற அடிப்படையில் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களை கொண்ட மேலாண்மையே அமைகிறது.**வரையறு பொறுப்பு:** உறுப்பினர்களின் பொறுப்பு அவர்கள் வைத்துள்ள பங்குகளின் பேரளவு மதிப்பு வரை என வரையறுக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் தனிப்பட்ட சொத்துக்களை நிறுவன கடன்களுக்காக இழக்க வேண்டியதில்லை.**நிலையான தன்மை:** பதிவு செய்யப்பட்டபின் நிரந்தர சட்டத் தோற்றம் பெறுகிறது. இது நீடித்த வாழ்வு உடையது.**மலிவான சேவை:** நல்ல சேவையை மலிவான செலவில் அளிக்கிறது. சேவை முதன்மை நோக்கம். இலாபம் இரண்டாவது நோக்கமே. **வரிச்சலுகைகள்:** கூட்டுறவில் வருவாய்க்கு வருமானவரி விதிக்கப்படுவதில்லை. வருமானவரி, முத்திரைக் கட்டணம், பதிவுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. **சமூகப்பயன்:**கூட்டுறவு அமைப்பு என்பது போட்டியில்லா நிறுவனமாகும். தனி மனித சுதந்திரம், சமூக நீதி மற்றும் பரஸ்பர கூட்டுறவை இது வளர்க்கிறது. **வேலைவாய்ப்பு:** இவ்வமைப்பு வளர வளர வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது. கிராம அளவில் வேலை வாய்ப்பை உருவாக்குவது இதன் சிறப்பு நன்மை.**அரசின் ஆதரவு:** சமுதாய மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களை கூட்டுறவு மூலம் உயர்த்துவது அரசின் நோக்கம். இந்நோக்கம் நிறைவேற கூட்டுறவுக்கு அரசு நிதியும் அளித்து, சலுகைகளையும் தருகிறது.

**66அ) கூட்டாளிகளின் உரிமைகள்** 1. ஒவ்வொரு கூட்டாளிக்கும் தொழிலை நடத்தவும் மேலாண்மையில் பங்கேற்கவும் உரிமை உண்டு. 2. ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன தொடர்பான பிரச்சனைகளுக்கு தம் கருத்தை தெரிவிக்க உரிமை உண்டு. 3. முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்னர் தங்களை கலந்து ஆலோசிக்க வேண்டும்

எனக் கோருவதற்கு உரிமை உண்டு 4. ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன ஏடுகளையும், கணக்குகளையும் கண்காணித்து நகலெடுக்கும் உரிமை உண்டு.

5. ஒவ்வொரு கூட்டாளிக்கும் இலாபத்தில் சமபங்கேற்க உரிமை உண்டு. 6. தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீது 6% வட்டி பெற உரிமைஉண்டு. 7. அன்றாட வியாபாரத்தில் தாம் செய்த செலவுக்கு ஈட்டுரிமை பெற உரிமை உண்டு 8. தொழிலுக்காக நிறுவன சொத்துக்களை நிறுவனத்தில் சேர்ப்பதை தடுக்க உரிமையுண்டு. 9. ஒப்புதல் இன்றி புதிய கூட்டாளிகளை நிறுவனத்தில் சேர்ப்பதை தடுக்க உரிமையுண்டு. 10. நிறுவனத்திலிருந்து ஒய்வு பெற உரிமை உண்டு.

**கூட்டாளியின் கடமைகள்** அனைத்து கூட்டாண்மைக்கும் பொருந்தும், உடன்பாட்டால் மாற்றமுடியாத சட்டத்தால் நிரந்தரமாக கொடுக்கப்பட்ட கடமைகளே முழுமையான கடமைகள் : 1) ஒவ்வொரு கூட்டாளியும் தன் கடமைகளை கவனக்குறைவின்றியும், நாணயமாகவும், அனைத்து கூட்டாளிகளின் நலனுக்காகவும் நிறைவேற்ற வேண்டும். 2)ஒவ்வொரு கூட்டாளியும் ஏனைய கூட்டாளிகளிடம் விசுவாசமாகவும், உண்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும். 3) தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் செயல்பட வேண்டும். 4) வேறு வகையில் உடன்பாடு இல்லாத போது நிறுவன நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டவர். 5) தொழில் நடவடிக்கையில் தான் அறிந்து செய்த தவறினால் ஏற்பட்ட நட்டத்துக்கு நிறுவனத்திற்கு ஈட்டுறுதி செய்ய வேண்டும். 6) பிற கூட்டாளிகளின் இசைவின்றி தன் பங்கை பிறருக்கு மாற்றக் கூடாது. 7) நிறுவன தொழில் சார்ந்த கணக்குகளை உண்மையாகவும், சரியாகவும் வைத்திருக்க வேண்டும். 8) கூட்டாண்மை தொழிலுக்கு எதிராக எத்தொழிலையும் போட்டியாக கூட்டாளி நடத்தக்கூடாது. 9) நிறுவன சொத்துக்களை நிறுவன நலனுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். 10) எக்கூட்டாளியும் இரகசிய லாபங்களை ஈட்டக்கூடாது.

## 66.ஆ)பங்குகட்கும் கடனீட்டுப்பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடு :

| அடிப்படை | பங்குகள் | கடனீட்டுப்பத்திரங்கள் |
|---|---|---|
| பொருள் | ஒரு நிறுமத்தில் பங்கு முதலீல் ஒரு சிறு கூரே பங்காகும் எனவே பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் நிலையில் இருக்கிறார் | கடனீட்டுப்பத்திரங்கள் நிறுமத்திற்கு கொடுத்த கடனை உறுதிபடுத்தும் சான்றாகும்கடன் பத்திரதாரர் நிறுமத்தின்கடனாளர்ஆகி றார் |
| இலாபத்தை வழங்குதல் | போதுமா லாபம் ஈட்டினால் மட்டுமே பங்குனர் கட்குபங்காதாம் வழங்கப்படும். | குறிப்பிட்ட கால இடைவெளிகளில் லாப நட்டத்தை கருதாமல் கடனீட்டு பத்திரத்தின் மீது வட்டி வழங்கப்படுகிறது.இயக்கு நர் முடிவால்இதனை மாற்ற முடியாது |
| இலாபத்தின் அளவு | முற்றுரிமை பங்கட்கு குறிபிட்ட விதத்தில் நிலையான பங்காதயம் ஆனால் நேர்மை பங்குகட்கு கொடுக்கப்படும் பங்காதாய விகிதம் லாபத்திற்கேற்ப மாறக்கூடியது | குறிப்பிட்ட விதத்தில் வட்டி செலுத்தப் பெறும் இலாத்தின் அளவை ஒட்டி வட்டிவீதம் மாறாது. |
| இயக்குநர் ஒப்புதல் | லாபம் ஈட்டுறுப்பினும் இயக்கநர்அவை பரிந்துறைத்து ஆண்டுபொதுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம் விளம்பப்பட்டால் மட்டுமே பங்காதாயம் வழங்கப்படும் | கடனீட்டுப்பத்திர வட்டி செலுத்துவதற்கு எவருடைய பரிந்துறையும் ஒப்பதலும் வேண்டியதில்லை |
| லாபத்தை வழங்குதல் | பங்காதாயம் லாபப்பகிர்வு ஆகும் | கடனீட்டுப்பத்திரவட்டி லாபத்தின் மீதான செலவாகும். |
| பொறுப்பு | பங்குநர் ஒருவர் பொறுப்புதான் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்த பெறதிருக்கும் தொகை அளவே ஆகும். | ஆத்தகைய பொறுப்பு ஏதும் கடனீட்டு பத்திரதாரர்களுக்கு இல்லை |
| வட்டத்தில் வெளியிடுதல் | நிறுமச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் நிறுமம் பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம் | கடனீட்டபத்திரங்களைவட்டத்தில் வெளியிட அத்தகைய நிபந்தனைகள் ஏதுமில்லை |
| சொத்துகள் மீது பிணை | நிறுமச் சொத்துகள் மீது பங்குநர்கட்கு ஈடுஏதுமில்லை | கடனீட்டு பத்திரங்கள் பொதுவாக சொத்துகள் பிணையாக பெற்றிருக்கும் |

## 67)அ)நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் :

1.நிறுமத்தின் செயலகத்துறையின் தலைவர் என்ற முறையில் தனக்குகீழ்லுள்ள அனைத்து நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் நிறுமத்தின் முன்மை அதிகாரி என்ற முறை உண்மைச்சான்றென உறுதியளிக்க வேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடுதல் அவருடையபணி.

2.இயக்குநரவை தலைவரிடம் கலந்தாலோசித்து இயக்குநரவை கூட்டநாள் இடம் நேரம் முதலியவற்றை முடிவ செய்தலும் அதன் நிகழ்ச்சி நிரலைத்தயாரித்து அதனை கூட்டஅறிவிக்கையுடன் இணைத்தனுப்புதலுமாரும்.

3.இயக்குநரவை கூட்டத்தின் செயல்பாடுகள் நிறுமங்கள் சட்ட விதிமுறைகளுக்கு முரண்படாமலும் அமைப்பு முறையேடு செயல் முறை விதிகள் ஆகியவற்றின் வரம்பு மிகாமலிருக்க பார்த்துகொள்ள வேண்டியது அவர் பணிகள் ஆகும்.

4.பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணிசெய்கிறார்.அவர்களுடன் கூர்மதிப்புடன் நடந்தகொள்ள வேண்டும்.

5.பங்குநர்கள் எழுப்பும் வினாக்களுக்கும் ஜயங்கட்கும் உாயி முறையில் பண்புகாத்து காலங்கடத்தாமல் பதிலளிக்க வேண்டும்.

சட்ட முறைக்கடைமைகள் :

1.எச் சட்டத்தின் கீழாவது உண்மையென சான்றளிக்க வேண்டியிருப்பின் அத்தகைய ஆவணத்தில் கையொப்பமிடல்

2.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தக்கல் செய்ய

3.நிறுமத்தின் பதிவலுவலகம் உள்ள இடம்குறித்த அறிக்கையைத்தாக்கல் செய்ய

4.தொழில் தொடக்கச் சான்றிதல் பெற சட்டமுறை உறுதிவிலம்பல் செய்தலும் அவற்றை பதிவாளரிடம் தக்கல் செய்தலும்.

5.நிறுமத்தின் ஆண்டறிக்கையில் கையப்பமிடல்

பொதுக் கடமைகள் :

1.தன்னுடைய கமைகளை மிகுந்த கவனத்துடனும் நேர்மையுடனும் தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும்.

2.இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல்.

**67)ஆ). பங்குமாற்றத்தின் நன்மைகள்** :

**நிறுமத்திற்கு நன்மைகள்:** 1. பங்கு மாற்றகம் கையாளும் பங்குகளுக்குரிய நிறுமங்களின் மதிப்பு உயரும். நிறுமம் வலுவானது என்ற எண்ணம் உருவாகும். 2. நிறுமங்களின் பங்குகளுக்கு பரந்த சந்தை கிடைக்கிறது. 3. நிறுமம் வேறொரு நிறுமத்தோடு இணைக்கப்படும்போது சாதகமான

பேரத்தை பெற உதவி செய்கிறது. 4. ஊக வணிகர்களின் செயல்பாட்டினால் பட்டியலிடப்பட்ட பத்திரங்களின் விலைகளில் அடிக்கடி ஏற்படும் ஏற்ற தாழ்வுகள் குறைகின்றன.

**முதலீட்டாளருக்கு நன்மைகள்:**

1. முதலீட்டாளர்கள் தம் விருப்பம்போல் பத்திரங்களை வாங்க விற்க ஆயத்த சந்தையாக விளங்குகின்றன.

2. பத்திரங்களுக்கான நிலையான சந்தையையும் முதலீடுகளுக்கான நீர்மைத் தன்மையையும் அளிக்கின்றது. 3. பங்கு மாற்றகங்களில் வாணிகம் செய்யப்படும் பத்திரம் கடன்பெற நல்ல பிணையமாக ஏற்கப்படுகின்றன. 4. பத்திர மதிப்பு விலைப்புள்ளியாக வெளியிடப்படுவதால் முதலீட்டின் நடப்பு உண்மை மதிப்பை அறிந்து கொள்ள முடிகிறது.

**சமுதாயத்திற்கு ஆற்றும் சேவைகள்:**

1. பெருமளவு மூலதன உருவாக்கம் செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது. 2. பத்திர விற்பனையை ஊக்கப்படுத்தி சிறப்பாக மேலாண்மை செய்யப்படும்நிறுமங்களின் நிலையை உயர்த்துகின்றன.

3. அரசு நிதியை மக்களிடம் கடனாக பெற, நாட்டின் முக்கிய வளர்ச்சி திட்டங்களை அரசு நிறைவேற்றுவதற்கும் உதவுகின்றன. 4. நாட்டின் தொழில் நிலையை அளவிடும் கருவியாக பங்கு மாற்றகங்கள் செயல்படுகின்றன;.

**பங்கு மாற்றகங்களின் குறைபாடுகள்:**

1. அமைப்பு முறை சீராக கட்டுப்பாடோடு இல்லை.

2. உறுப்பினருக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி நிர்ணயிக்கப்படவில்லை. உறுப்பினராக கட்டுப்பாடுகள் ஏதுமில்லை.

3. விரும்பத்தகாத ஆரோக்கியமற்ற ஊக வாணிகத்தை கட்டுப்படுத்த தவறியிருக்கிறது.

4. பட்டியலிடப்படுவதற்குச் சரியான விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை.

5. சில நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பங்குமாற்றகங்கள் செயல்படுகின்றன.